# भारतीय जीवन बीमा निगम

# LIFE INSURANCE CORPORATION OF INDIA

## प्रधान मंत्री जन धन योजना

## के तहत जन-धन खाताधारकों

## के लिये रु.30,000/- के

## जीवन बीमा सुरक्षा के

## दावा निपटारा हेतु प्रक्रिया

# PRADHAN MANTRI JAN DHAN YOJANA (PMJDY)

## PROCEDUREFOR CLAIM SETTLEMENT

## UNDER LIFE INSURANCE COVER OF

## Rs.30,000/- FOR PMJDY ACCOUNT HOLDER

## பிரதான் மந்திரி ஜான் தான் யோஜனா திட்டத்தின் கீழ் வங்கிகளுக்கான கிளைம் பிராசசிங் செயல்முறை

/ உள்ளடக்கங்கள்


A. முன்னுரை

B. விளக்கங்கள்

C. திட்டத்தின் கீழுள்ள பலன்கள்

D. அடிப்படை தகுதி நிபந்தனைகள்

E. தகுதிபெறா வகைப்பிரிவுகள்

F. திட்டத்திலிருந்து வெளியேறல்

G. கிளைம் செட்டில்மெண்ட் செயல்முறை

H. இறப்பு கிளைம் தெரிவிப்பைப் பெறுவதன் பேரில் வங்கிகள் பின்பற்ற வேண்டிய செயல்முறை

I. கிளைம் தெரிவிப்பைப் பெறுவதன் பேரில் எல்ஜசி பின்பற்ற வேண்டிய செயல்முறை

J. பிற்சேர்க்கைகளின் பட்டியல்

# பீஎம்ஜேடிஒய் கிளைம் செயல்முறை

## A. முன்னுரை

மாண்புமிகு பிரதம மந்திரி, 15 ஆகஸ்டு 2014 அன்றைய தனது சுதந்திர தின உரையில், தற்போது அடிப்படை நிதித் தேவைகள்கூட இல்லாத ஏராளமான மக்களை குறிவைக்கிற நிதிசார் உள்ளடக்களின் முழுமையான திட்டமொன்றை அறிவித்தார். பிரதான் மந்திரி ஜான் தான் யோஜனா (பீஎம்ஜேடிஒய்) திட்டம், இதுவரை கணக்கு எதுவும் கொண்டிராத ஒவ்வொரு குடும்பத்திற்கும் அடிப்படை வங்கிக் கணக்கை வழங்குவதை தெரியப்படுத்துகிறது. வங்கிக் கணக்கானது, ரூ. 1 லட்சம் எனும் உள்ளார்ந்த விபத்துக் காப்பீட்டைக் கொண்ட ரூபே டெபிட் கார்டுடன் வருகிறது.

புதுதில்லியில் 28.08.14 அன்று பீஎம்ஜேடிஒய் திட்டம் துவங்கப்பட்ட போது, மாண்புமிகு பிரதம மந்திரி, 15 ஆகஸ்டு 2014 முதல் 26 ஜனவரி 2015 வரையிலாக காலகட்டத்தில் முதன் முறையாக வங்கிக் கணக்குக்கு சந்தா செலுத்துகிற அனைவருக்கும் ரூபே கார்டுடன் ரூ. 30,000/- க்கான ஆயுள் காப்பீட்டை அறிவித்தார்.

இந்த ரூ. 30,000/- ஆயுள் காப்பீடானது, **பிரதான் மந்திரி ஜான் தான் யோஜனா திட்டத்தின் கீழான ஆயுள் காப்பீடு என அழைக்கப்படுகிறது**, இது ஏதேனும் காரணத்தினால் ஆயுள் காப்பீட்டாளர் மரணமடையும் நிகழ்வில் மரணமடைந்தவரின் குடும்பத்திற்கு ஆயுள் காப்பீட்டுத் தொகையை வழங்கும். இத்திட்டம், சமூகப் பாதுகாப்புத் திட்டம் எதிலும் உள்ளடக்கப்படாத நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஏழைகள் எனப்படுகின்ற, நேரடி காப்பீட்டைப் பெற இயலாத குடும்பங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதை இலக்காய்க் கொண்டுள்ளது.

## B. விளக்கங்கள்

| | | |
|---|---|---|
| பீஎம்ஜேடிஒய் | - | பிரதான் மந்திரி ஜான் தான் யோஜனா |
| எச்ஓஎஃப் | - | குடும்பத் தலைவர் |
| ரூபே கார்டு | - | பீஎம்ஜேடிஒய் திட்டத்தின் கீழ் துவங்கப்பட்ட பிஎஸ்பிடிஏ கணக்குடன் வங்கி வழங்குகிற டெபிட் கார்டு |
| ஆதார் அட்டை | - | இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யூஐடிஏஐ) வழங்குகிற பயோ-மெட்ரிக் அட்டை |
| ஐடி சட்டம் 1961 | - | வருமான வரிச் சட்டம் 1961, இந்திய அரசு |
| ஆம் ஆத்மி பீமா யோஜனா (ஏஏபிஒய்) | - | நிதியமைச்சகத்தின் இந்திய அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டமான இது, இறப்பு நிகழும் சம்பவத்தில் ரூ. 30,000/- ஆயுள் காப்பீட்டுத் தொகையையும், நிரந்தர மற்றும் பகுதியளவு ஊனத்திற்கான பலன்களுக்கு அப்பால், விபத்துசார் மரணம் நிகழும் சம்பவத்தில் ரூ. 75,000/- கொடுக்கிறது. |
| ஏஏபிஒய்-இன் 48 தொழில்கள் | - | ஏஏபிஒய் ஆயுள் இடர் காப்பானது, பிற்சேர்க்கை ஏ-வில் கொடுக்கப்பட்டுள்ளவாறு பட்டியலிடப்பட்டுள்ள 48 |

| | | |
|---|---|---|
| | | தொழில்களுக்கு உரிய நபர்களுக்கு வழங்கப்படுகிறது. |
| அடிப்படை தகுதி நிபந்தனைகள் | - | பீஎம்ஜேடிஒய் திட்டத்தின் கீழான பலன்களுக்கு தகுதி பெற தனிநபர் பூர்த்திசெய்யவேண்டிய நிபந்தனைகள் |
| ஏபீபிஎஸ் | - | ஆதார் பேமெண்ட்ஸ் ப்ரிட்ஜ் சிஸ்டம் |
| பயோ-மெட்ரிக் கார்டு | - | பீஎம்ஜேடிஒய் திட்டத்தின் கீழ் பிஎஸ்பிடிஏ கணக்கைத் துவங்குவதற்கு வங்கி ஏற்றுக்கொள்கின்ற, ஆதார் அட்டை அல்லது உரிய ஆணையத்தால் வழங்கப்படுகிற ஏதேனும் அட்டை. |

C. **திட்டத்தின் கீழுள்ள பலன்கள்**

இத்திட்டம், தகுதிக்கான நிபந்தனைகளை பூர்த்திசெய்வதன் பேரில், எக்காரணத்தினாலேனும் பலனாளிக்கு மரணம் சம்பவிக்கும் நிகழ்வில், ரூ. 30,000/- எனும் தொகையை ஆயுள் காப்பாக வழங்குகிறது:

D. **அடிப்படை தகுதி நிபந்தனைகள்**

i. 15-08-14 முதல் 26-01-15 வரையிலான காலகட்டத்தில் அல்லது இந்திய அரசால் மேற்கொண்டு நீட்டிக்கப்படக்கூடிய ஏதேனும் கூடுதல் காலகட்டத்திற்கு, ரூபே கார்டுக்கும் கூடுதலாய், முதன்முறையான வங்கிக் கணக்கு துவங்குகிற நபர்.

ii. நபர், வழக்கமாய் குடும்பத் தலைவராக அல்லது குடும்பத்தின் சம்பாதிக்கும் நபராக இருக்க வேண்டும் மற்றும் 18 முதல் 59 வயதுக்குள் உள்ளவராக (அதாவது, நபருக்கு குறைந்தது 18 வயதாகியிருக்க வேண்டும் மற்றும் 60 வயதைத் தாண்டியிருக்கக்கூடாது) இருக்க வேண்டும். குடும்பத் தலைவருக்கு 60 அல்லது அதிக வயதாயிருக்கும் பட்சத்தில், மேற்கூறிய வயதுப் பிரிவில் உள்ள குடும்பத்தின் இரண்டாவது சம்பாதிக்கும் நபர், தகுதிக்குட்பட்டு, உள்ளடக்கப்படுவார்.

iii. நபரிடம், ரூபே கார்டு மற்றும் பயோ-மெட்ரிக் கார்டானது வங்கிக் கணக்கிற்கு இணைக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது ஏற்கனவே இல்லை எனில் வங்கிக் கணக்கிற்கு இணைக்கின்ற செயலில் இருக்கவேண்டும்.

iv. கணக்கு, சிறு கணக்கு உட்பட எந்த வங்கிக் கணக்காகவும் இருக்கலாம்.

v. காப்பீடு திறன்மிக்கதாக இருக்க, மேற்கூறிய ரூபே கார்டு செல்லுபடியாவதாகவும், உறுப்பினர் இறக்கும் நேரத்தில் செயல்படுவதாகவும் இருக்கவேண்டும்

vi. குடும்பத்திலுள்ள ஒரேயொரு நபர் மட்டுமே பீமா திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படுவார் மற்றும் அந்நபருக்கு பல கார்டுகள்/கணக்குகள் இருந்தால், பலனானது ஒரேயொரு அட்டையின் கீழ் மட்டுமே அனுமதிக்கப்படும், அதாவது, தகுதி நிபந்தனைகளுக்கு உட்பட்டு, குடும்பத்தின் ஒரேயொரு நபர் மட்டுமே ரூ. 30,000/- எனும் ஒற்றை காப்பீட்டைப் பெறுவார்.

vii. இத்திட்டத்தின் கீழான ரூ. 30,000/- எனும் ஆயுள் காப்பு, துவக்கத்தில் 5 ஆண்டு காலத்திற்கனதாக இருக்கும், அதாவது, நிதியாண்டு 2019-20 முடியும் வரை. அதன்பிறகு,

இத்திட்டம் மீளாய்வு செய்யப்படும் மற்றும் பின்னர் காப்பீட்டாளர் எதிர்கால பிரீமியம் செலுத்தல் தொடர்பான விவகாரம் உட்பட இதனை தொடர்வது குறித்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் யாவும் பொருத்தமான முறையில் தீர்மானிக்கப்படும்.

viii. பீஎம்ஜேஜெய்டி கணக்கு கூட்டாக பராமரிக்கப்பட்டால், முதல் கணக்குதாரர், அதாவது முதன்மை கணக்குதாரர், தகுதி நிபந்தனைகளுக்கு உட்பட்டு காப்பீட்டிற்கு தகுதி பெறுவார்.

## E. தகுதிபெறா வகைப்பிரிவுகள்

i. மத்திய அரசு மற்றும் மாநில அரசுப் பணியாளர்கள் (பணியில் உள்ளவர்கள் அல்லது பணிஓய்வு பெற்றவர்கள்) மற்றும் அவர்களது குடும்பத்தினர்.

ii. பொதுத் துறை நிறுவனங்கள், பொதுத் துறை வங்கிகள், மத்திய அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள், மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் அல்லது மத்திய மற்றும் மாநில அரசுகளால் கூட்டாய் நிர்வகிக்கப்படுகின்ற ஏதேனும் நிறுவனம் போன்றவற்றின் பணியாளர்கள் (பணியில் உள்ளவர்கள் அல்லது பணிஓய்வு பெற்றவர்கள்) மற்றும் அவர்களது குடும்பத்தினர்.

iii. ஐடி சட்டம் 1961-இன் படி வரி செலுத்தவேண்டிய வருமானம் கொண்ட அல்லது ஆண்டுதோறும் வருமான வரிப் படிவம் பூர்த்திசெய்கின்ற அல்லது வருமானத்திலிருந்து டீடிஎஸ் பிடித்தம் செய்யப்படுகின்ற நபர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்.

iv. திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள 48 தொழில்களில் உள்ளடங்குகிற ஆம் ஆத்மி பீமா யோஜனாவில் உள்ளடங்குகின்ற நபர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்.

v. மற்றபடி, கணக்குக்கு எதிராய் வங்கியின் மற்ற ஏதேனும் திட்டத்தின் பேரில் ஆயுள் காப்பீட்டைக் கொண்டுள்ள தகுதியான கணக்குதாரர்கள், இரு திட்டங்களுக்கு இடையில் ஒன்றை தேர்வுசெய்து, ஒன்றிலிருந்து மட்டுமே பலனைப் பெறுவார்.

vi. திட்டத்தின் அடிப்படை தகுதி நிபந்தனைகளை நிறைவேற்றாத அனைத்து நபர்கள்.

## F. திட்டத்திலிருந்து வெளியேறல்

நபர், 60 வயதை பூர்த்திசெய்தவுடன் திட்டத்திலிருந்து வெளியேறுவார், அதாவது நபருக்கு 60 வயது பூர்த்தியாகின்ற நாளில் அல்லது இத்திட்டம் நிறைவடைகின்ற நாளில், இதில் எது முதலில் நிகழ்கிறதோ அந்நாளில்.

## G. கிளைம் செட்டில்மெண்ட் செயல்முறை

a) ரூ. 30,000/- எனும் கிளைம் தொகை, நியமனதாரர்(கள்)/ கணக்குதாரரின் சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு செலுத்தத்தக்கதாகும். இடர் காப்பானது, நபருக்கு அவரது 18 வயது (பூர்த்தியானது) முதல், 60 வயது முடியும் வரை வழங்கப்படும், அதாவது தகுதியானது 60 வயது பூர்த்தியானவுடன் முடிந்துவிடும் மற்றும் அவர் 60 வயது பூர்த்தியாகின்ற நாளில் திட்டத்திலிருந்து வெளியேறுவார்.

b) ரூ. 30,000/- எனும் இறப்பு கிளைம் பலனானது, நியமிக்கப்பட்டுள்ள பென்ஷன் & குரூப் ஸ்கீம் (பீ&ஜிஎஸ்) ஆஃபிஸ் ஆஃப் எல்ஐசி-யால் கொடுத்துத் தீர்க்கப்படும். பின்பற்றப்படுகின்ற செயல்முறை பின்வருமாறாக இருக்கும்:

i. பிற்சேர்க்கை பி-யின்படியான கிளைம் ஆவணங்கள் யாவும் சம்மந்தப்பட்ட வங்கியின் மாவட்ட கிளையால்/இணைப்புக் கிளையால், கிளைம்களை செயல்படுத்துவதற்கென இந்நோக்கத்திற்காக எல்ஐசி நியமித்துள்ள, அருகிலுள்ள பென்ஷன் & குரூப் ஸ்கீம் யூனிட்டிற்கு (பீ&ஜிஎஸ் யூனிட்) அனுப்பிவைக்கும். பீ&ஜிஎஸ் யூனிட்களின் பட்டியல், பிற்சேர்க்கை டி-யாக இணைக்கப்பட்டுள்ளது.

ii. கிளைம் தொகை, வங்கிக் கணக்கில் நியமனதாரராக உள்ள நியமனதாரருக்கு செலுத்தப்படும். நியமனம் செய்யப்படவில்லை எனும் நிகழ்வில் அல்லது காப்பீட்டாளருக்கு முன்பே நியமனதாரர் இறந்திருந்தால் அல்லது நியமனதாரர் வாழ்க்கைத்துணையாக, குழந்தையாக அல்லது பெற்றோராக இல்லாதவர் எனில் கணக்குதாரர், எல்ஐசி -யின் பரிந்துரைத்த முறையில் (பிற்சேர்க்கைகள் சி1 மற்றும் சி2 -இல் கொடுக்கப்பட்டுள்ளன) உரிமையின் சட்டப்பூர்வ ஆதாரத்துடன் வழங்குவதற்காக இண்டெம்னிடி பாண்டை சமர்ப்பிக்க வேண்டும்.

iii. கிளைம் தொகையானது, ஏபீபிஎஸ் வாயிலாக நியமனதாரர்(கள்)/சட்டப்பூர்வ வாரிசுகளின் வங்கிக் கணக்கிற்கு செலுத்தப்படும், அதாவது தொகையானது, ஆதார் கார்டு எண்ணிற்கு இணைக்கப்பட்டுள்ள கணக்கிற்கு கிரெடிட் செய்யப்படும்.

iv. கிளைம் படிவம், கோருபவரால் எல்ஐசி அலுவலகம் எதற்கேனும் நேரடியாக சமர்ப்பிக்கப்படும் நிகழ்வில், எல்ஐசி அலுவலகம் அதை, சம்மந்தப்பட்ட வங்கியிலிருந்து தேவையான சரிபார்ப்புகள் முதலானவற்றைப் பெற உடனடியாக, இறந்த கணக்குதாரரின் சம்மந்தப்பட்ட வங்கிக்கு அனுப்பிவைக்கும். சம்மந்தப்பட்ட வங்கிக் கிளை, கிளைமை பிராசஸ் செய்வதற்காக கிளைம் படிவத்தை எல்ஐசி-யின், அருகிலுள்ள பீ&ஜிஎஸ் யூனிட்டிற்கு அனுப்பி வைக்கும்.

## H. இறப்பு கிளைம் தெரிவிப்பைப் பெறுவதன் பேரில் வங்கிகள் பின்பற்ற வேண்டிய செயல்முறை

பீஎம்ஜேடிஒய் சேமிப்புக் கணக்கு முதலில் துவங்கப்பட்ட வங்கியின் சம்மந்தப்பட்ட கிளை, எல்ஐசியுடன் சேர்ந்து கிளைமைப் பதிவுசெய்ய வேண்டியுள்ளது. கிளைமைப் பதிவுசெய்யும்போது, முன்னனுப்புகிற வங்கிக் கிளை, கிளைம் செலுத்தத்தக்கதா இல்லையா என்பதன் தகுதி நிபந்தனைகளின் அடிப்படையில் விசாரணை செய்யும். இந்நோக்கத்திற்காக, பின்வரும் ஆவணங்களை வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படும்:-

1. இறந்த உறுப்பினரின் இறப்புச் சான்றிதழின் சான்றொப்பமிட்ட நகல்.

2. இறந்த தேதியன்று கணக்குதாரரின் வயதைத் தீர்மானிப்பதற்கு, இறந்தவரின் ஆதார் அட்டையின் ஃபோட்டோநகல். ஆதார் அட்டை வழங்கப்படவில்லை எனில், <u>வயதுச் சான்றுக்கான பின்வரும் எதுவேனும் ஒன்றின்</u> சான்றொப்பமிட்ட ஃபோட்டோநகலைக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்-ளப்படலாம் :-

    a) பிறப்புப் பதிவிலிருந்து எடுக்கப்பட்டது

    b) பள்ளிச் சான்றிதழிலிருந்து எடுக்கப்பட்டது

    c) குடும்ப அட்டை

    d) வாக்காளர் அடையாள அட்டை

இறந்தவர், இறப்பதற்கு முன் 60 வயதைப் பூர்த்தி செய்திருந்தால், அவருக்கு ஆயுள் காப்பீட்டுப் பலன் கிடைக்காது. எனவே, இறந்த தேதியன்று உள்ள வயதைக் கணக்கிடுவது முக்கியமாகும்.

3. செல்லுபடித்தன்மையின் சரிபார்ப்பு மற்றும் ரூபே கார்டின் செயல்பாட்டு நிலை (ரூபே கார்டு தடைசெய்யப்பட்டுள்ளதா இல்லையா என்பதை சரிபார்க்கப்பட வேண்டியுள்ளது).

4. இறந்தவரின் பிபீஎல் அட்டை அல்லது குடும்ப அட்டையின் உதவியுடன், 'குடும்பத் தலைவர்' எனும் நிலையையும், அந்நபர், குடும்பத்தின் சம்பாதிக்கும் உறுப்பினராக இருக்கிறாரா என்பதையும் சரிபார்ப்பது.

5. பத்தி ஈ-யில் கொடுக்கப்பட்டுள்ள தகுதியின்மை நிபந்தனைகளின்படி, இறந்தவர் தகுதிபெறவில்லையா என்பதைச் சரிபார்ப்பது.

6. பலனானது ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் மட்டுமே வழங்கப்படும் என்பதால், கணக்குக்கு எதிராய் வங்கியின் வேறு ஏதேனும் ஆயுள் காப்பீட்டுப் பாதுகாப்பின் கீழ், இறந்தவர் உள்ளடக்கப்பட்டுள்ளாரா என்பதை சரிபார்ப்பது.

7. பீஎம்ஜேடிஒய் திட்டத்தின் கீழுள்ள கூட்டு கணக்குதாரர்கள் எனும் பட்சத்தில், தகுதி நிபந்தனைகளுக்கு உட்பட்டு, முதல் கணக்குதாரருக்கு (முதன்மைக் கணக்குதாரர்) ஆயுள் காப்பீட்டுப் பலன் வழங்கப்படும்.

8. கிளைம் படிவம் மற்றும் டிஸ்சார்ஜ் ரசீது முறையாய் பூர்த்திசெய்யப்பட்டிருப்பது (பிற்சேர்க்கை பி-யில் கொடுக்கப்பட்டுள்ளவாறு) :- கிளைம் படிவத்தின் பகுதி ஏ, நியமனதாரரால்/சட்டப்பூர்வ வாரிசால்/கோருபவரால் பூர்த்திசெய்யப்பட வேண்டியுள்ளது. வங்கியின் அங்கீகரிப்பட்ட அதிகாரி, பகுதி பி-யை பூர்த்திசெய்ய வேடும். அதிகாரி, பகுதி சி-யில் கோருபவரின் கையொப்பத்திற்கு சாட்சியாய் இருக்க வேண்டும். உரிய இடங்களில் கிளைம் படிவத்தில் வங்கியின் முத்திரை பதிக்கப்பட வேண்டும். நியமனம் செய்யப்படவில்லை எனும் நிகழ்வில் அல்லது காப்பீட்டாளருக்கு முன்பே நியமனதாரர் இறந்திருந்தால் அல்லது நியமனதாரர் வாழ்க்கைத்துணையாக, குழந்தையாக அல்லது பெற்றோராக இல்லாதவர் எனில் கணக்குதாரர், எல்ஐசி -யின் பரிந்துரைத்த முறையில் (பிற்சேர்க்கைகள் சி1 மற்றும் சி2 -இல் கொடுக்கப்பட்டுள்ளன) உரிமையின் சட்டப்பூர்வ ஆதாரத்துடன் வழங்குவதற்காக இண்டெம்னிடி பாண்டை சமர்ப்பிக்க வேண்டும்.

9. பூர்த்திசெய்த கிளைம் படிவம் (பகுதி ஏ, பி & சி), பின்வரும் ஆவணங்களுடன் அருகிலுள்ள எல்ஐசி'யின் பீ&ஜிஎஸ் யூனிட்டிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியுள்ளது.

   a) இறந்த உறுப்பினரின் இறப்புச் சான்றிதழின் சான்றொப்பமிட்ட நகல்.

   b) இறந்த உறுப்பினரின் ஆதார் அட்டையின் சான்றொப்பமிட்ட ஃபோட்டோநகல்.

   c) கோருபவரின் ஆதார் அட்டையின் சான்றொப்பமிட்ட ஃபோட்டோநகல்.

எங்கள் பீ&ஜிஎஸ் -இல் மேற்கூறிய ஆவணங்கள் அனைத்துடன் கிளைம் படிவத்தைப் பெறுவதன் பேரில், பீ&ஜிஎஸ் யூனிட், ஆதாருடன் இணைக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கிற்கு இறப்பு கிளைம் நடவடிக்கைகளை கிரெடிட் செய்வதன் மூலம், தகுதிக்கு உட்பட்ட நியமனதாரர்/சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு ஆதரவாய் கிளைமை கொடுத்துத் தீர்க்கும்.

## I. கிளைம் தெரிவிப்பைப் பெறுவதன் பேரில் எல்ஜசியால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை

வங்கிகளிடம் இருந்து கிளைம் படிவத்தைப் பெறுவதன் பேரில், தேவையான உள்ளீட்டு செயல்முறையை மேற்கொண்ட பிறகு, பீ&ஜிஎஸ் யூனிட்டின் பயனர், பின்வரும் செயல்களை மேற்கொள்கிறார்:

1. கிளைம் படிவம் அனைத்து அம்சங்களிலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதையும், வங்கியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் தகுதி வரையறைகளை இறந்தவர் பூர்த்திசெய்திருப்பதையும் சரிபார்த்தல்.

2. கிளைம் மற்றபடி செலுத்தத்தக்கதாக இருந்தால், பயனர், பீஎம்ஜேடிஒய் (பிரதான் மந்த்ரி ஜான் தான் யோஜனா) திட்டத்திற்கான கிளைம் மாட்யூலுக்குள் நுழைவார். தொடர்புடைய தரவுகள், மாட்யூலில் உள்ளிடப்படும்.

3. மாட்யூல், இரு அம்சங்களைச் சரிபார்ப்பதற்காக சிஸ்டத்திற்குள் விசாரணைகளை மேற்கொள்ளும்

    a) அதே நபருக்காக ஒரு நிகழ்விற்கும் மேல் கிளைம் செலுத்தபடுவதைத் தவிர்க்கும் நோக்கில், அதே நபருக்கு கிளைம் ஏற்கனவே செலுத்தப்பட்டிருக்கிறதா என்பதைக் காண.

    b) இறந்தவர், ஆம் ஆத்மி பீமா யோஜனா திட்டத்தின் கீழும் உள்ளடக்கப்பட்டுள்ளரா என்பதைக் காண.

4. விசாரணையானது, நேர்மறையாக அல்லது எதிர்மறையாக இருக்கவுள்ள இரு தரவுத் தளங்களில் இருந்து விளைவை உருவாக்கும்.

5. விளைவு நேர்மறையாக இருந்தால், பதிவேடுகளின் பட்டியலானது, பயனரால் சரிபார்க்கப்படு-வதற்காக மாட்யூலால் உருவாக்கப்படும். கைமுறையாய் உரியமுறையில் சரிபார்த்த பிறகு, அந்நபர் தொடர்பாய் கோரிக்கை முன்பே செலுத்தப்படவில்லை எனில் அல்லது இறந்தவர் ஏஏபிஒய் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படவில்லை எனில், அது மேற்பார்வையாளரால் அங்கீகரிக்கப்பட வேண்டியுள்ளது. மேற்பார்வையாளரின் அங்கீகாரத்திற்கு பின், பயனர் உரிமைக்கோரலை தீர்ப்பதற்காக தொடரலாம்.

6. மேற்கண்ட செயல்பாடு, பிஎம்ஜேடிஒய் மற்றும் ஏஏபிஒய் கீழ் கட்டணமல்லாத நகல் கோரலை முடிந்தவரை நீட்டிப்பதை உறுதிசெய்கிறது. இறந்தவர் மற்றும் உரிமை கோருபவரின் ஆதார் அட்டை எண் இரண்டும் மறு பிரதி நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும்.

7. வெளியீடு எதிர்மறையாக இருந்தால், பிரிவானது உரிமை கோரலை தீர்த்து, தொடர பயனரை அனுமதிக்கும்.

பதிவேடுகள் மற்றும் கட்டண கோரலின் பதிவுகள், ஏஏபிஒய் கோரலின் பதிவுகளைப் போன்றே பராமரிக்கப்படும். டிஏபி மற்றும் ஊனமுற்றோர் நலன்களின் பணம் பிஎம்ஜேடிஒய் கீழ் வழங்கப்படாததால், தொடர்புடைய நெடுவரிசைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதில்லை.

**J.** கோரிக்கைப் படிவத்தை பின்வரும் வலைதளங்களிலிருந்து பெறலாம் www.licindia.in, www.iba.org.in, http://financialservices.gov.in, www.nic.in.

K. **<u>பிற்சேர்க்கைகளின் பட்டியல்</u>**

பிற்சேர்க்கை அ - ஆம் ஆத்மி பீம யோஜனா திட்டத்தின் கீழ் வரும் 48 தொழில்கள்

பிற்சேர்க்கை பி - வெளியேற்ற ரசீதுடன்-வரும்-எல்ஜசி கோரல் படிவம்.

பிற்சேர்க்கை சி1 - தலைப்பின் சட்ட சான்றுகளுடன் விலக்கக்கூடிய விண்ணப்ப படிவம்.

பிற்சேர்க்கை சி2 - தலைப்பின் சட்ட சான்றுகளுடன் விலக்கக்கூடிய, இழப்பீடு பத்திரத்தின் எல்ஜசி வடிவம்

பிற்சேர்க்கை டி - கோரல் படிவங்களை சமர்ப்பிப்பதற்கான பி&ஜிஎஸ் யூனிட்கள் பட்டியல்.